ரிஸாலே நூர் தொகுப்பிலிருந்து

# ரமழானின் தூது

பதீயுஸ்ஸமான் ஸஈத் நூர்ஸி

(இது புனித ரமழானில் பொதிந்துள்ள பல்வேறு தாத்பரியங்களுள் ஒன்பது தாத்பரியங்களை உள்ளடக்கிய ஒரு சிறு நூலாகும்.)

شَهْرُ رَمَضَانَ الَّذِي أُنزِلَ فِيهِ الْقُرْآنُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنَاتٍ مِّنَ الْهُدَىٰ وَالْفُرْقَانِ

**முதலாவது அம்சம்**

ரமழான் மாத நோன்பு இஸ்லாத்தின் முதன்மையான ஐந்து தூண்களுள் ஒன்றும் உயர் அந்தஸ்த்தைக் கொண்ட வணக்க வழிபாடுகளுள் ஒன்றுமாகும்.

இந்த வகையில் புனித ரமழான் மாத நோன்பில் பல்வேறு நோக்கங்களும் தாத் பரியங்களும் பொதிந்துள்ளன. வல்லோன் அல்லாஹ்வின் அகிலார்ந்த பரிபாலிப்பு, மனிதனின் சமூக வாழ்வு, தனி மனித வாழ்வு, உளப் பயிற்றுவிப்பு என்பவற்றுடன் இறை அருட்கொடைகளுக்கான நன்றி என்பன அவற்றுள் சிலவாகும்.

முதலில் நோன்பில் காணப்படும் இறை பரிபாலிப்புடன் தொடர்பான தாத்பரியங்களுள் ஒன்றை நோக்குவோம்:

வல்லோன் அல்லாஹ், பூமிப் பரப்பை ஓர் ஆகார விரிப்பாகப் படைத்து அத்தனை வகையான அருள் ஆகாரங்களையும் “ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ - நினையாப் புறத்திலிருந்து” என்ற வசனத்திற்கேற்ப அந்த விரிப்பில் ஒழுங்குபடுத்தி வைத்துள்ளான். இவ்வாறு தன்னுடைய பரிபாலிப்பின் பரிபூரணத் தன்மையையும் படைப்புகள் மீதான தனது அன்பு, ஆதரவு, ஈகை என்பவற்றையும் வெளிப்படுத்துகின்றான். அலட்சியப் போக்கு என்ற திரைக்குப் பின்னால், காரணகாரிய எல்லைக்குள் இருந்து சிந்திக்கின்ற மனிதன் சூரியன் போல் பிரகாசமான மேற்படி உண்மைகளைக் காண முடியாதவனாக இருக்கிறான். சில வேளை காண்பதை மறந்தும் விடுகிறான். புனித ரமழானில் இந்த நிலை திடீரென்று மாற்றம் பெறுகின்றது. இறை நம்பிக்கையாளர்கள் அனைவரும் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஓர் இராணுவ அணியைப் போல் மாறிவிடுகின்றனர். நித்திய அரசனின் விருந்துபசாரத்துக்குச்

சமூகமளித்த இராணுவ சிப்பாய்களைப் போன்ற கட்டுப்பாட்டுடன் மாலை வரை அவனது கட்டளைக்காகக் காத்திருந்து தமது அடிமைத்துவத்தைப் பறைசாற்றுகின்றனர். இவ்வாறு அந்த நித்திய அரசனின் அன்பும் அருளும் ஈகையும் பூரணத்துவமுமிக்க பரிபாலிப்புக்கு முன்னால் மிகவும் ஆழமும் மேன்மையும் நேர்த்தியும் மிக்க ஒரு வணக்கத்தின் மூலம் பதிலளிக்கின்றனர். இத்தகைய சிரேஷ்டமான ஒரு வணக் கத்திலும் விஷேடமான ஒரு கௌரவிப்பு நிகழ்விலும் பங்குபற்றாத மனிதர்கள் எவ்வளவு பெரிய அபாக்கியசாலிகள் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

## இரண்டாவது அம்சம்

அருள் நிறைந்த ரமழானில் இறை அருள் களுக்கு நன்றி செலுத்துவது தொடர்பான பல்வேறு தாத்பரியங்கள் பொதிந்துள்ளன. அவற்றுள் ஒன்றை அவதானிப்போம்:

முதலாம் வார்த்தையில் கூறப்பட்டுள்ளதைப் போன்று, ஓர் அரச சமையலறையிலிருந்து ஒரு சேவகனால் கொண்டு வரப்படும்

அறுசுவை உணவுகளுக்கு ஒரு விலையும் மதிப்பும் இருக்கின்றது. பெறுமதிவாய்ந்த அந்த அருள் ஆகாரங்களூடாக அவற்றை அருள்பாலித்த அரசனை அறிந்து கொள்ளாமல் வெறுமனே சேவகனுக்கு மாத்திரம் கையூட்டுக் கொடுத்து விட்டுச் செல்வது மிகப் பெரிய ஒரு மடமையாகும். வல்லோன் அல்லாஹ் மனித குலத்துக்காக வகை வகையான எண்ணற்ற அருள் ஆகாரங்களைப் பூமிப் பரப்பெங்கும் பரத்தி வைத்துள்ளான். மனிதன் நன்றியுள்ளவனாக இருக்க வேண்டும் என்பதே அந்த அருட் கொடைகளுக்காக எதிர்பார்க்கப்படுகின்ற விலையாகும். ஏதோ வெளிப் பார்வைக்கு காரணகர்த்தாக்களாகவும் எஜமானர்களாக வும் தென்படுபவர்களால் அதிகபட்சம் சேவகர்கள் என்ற அந்தஸ்த்துக்கு அப்பால் செல்ல முடியாது. அந்த சேவகர்களுக்காக ஒரு விலை கொடுக்கிறோம்; அவர்களுக்கு நன்றியும் தகுதிக்கு விஞ்சிய அளவு பெருமதிப்பும் வைக்கிறோம். வாழ்க்கை பூராகவும் நன்றிக்கடன் பட்டவர்களாக ஆகி விடுகிறோம். ஆனால் உண்மை அருளாலன் அந்த சேவகர்களை விட எண்ணற்ற மடங்கு அதிகம் நன்றி செலுத்தப்பட வேண்டிய

தகுதியுடையவனாக இருக்கிறான். ஆம்! தூய நன்றிக்கான முதன்மையான அடிப்படைகள் இரண்டாகும். முதலாவது, எந்த விதத் திரையும் இன்றி நேரடியாகவே உண்மை அருளாலனை அறிந்துகொள்வதாகும். இரண்டாவது, அந்த அருட்கொடைகளின் உண்மையான பெறுமதியை அறிந்து அவற்றின்பால் தனக்குள்ள தேவையை உணர்ந்து கொள்வதாகும்.

இந்த வகையில் புனித ரமழான் நோன்பானது உண்மையும் தூய்மையும் பூர்த்தியும் மிக்க உயர்வான ஒரு நன்றிக்கான திறவுகோளாகும். ஏனெனில் பிற காலங்களில் கடமைப்பாட்டில் இல்லாத மனிதர்களுள் அதிகமானவர்கள் பசியின் யதார்த்தத்தை அனுபவிக்காதிருப்பதால், அதிகமான அருள்களின் பெறுமதியை புரிந்துகொள்ள முடியாதுள்ளனர். காய்ந்த ஒரு ரொட்டித் துண்டிலிருக்கும் அருட் பெறுமானம் வயிறு நிறைந்த நிலையிலுள்ள மனிதர் களால், குறிப்பாகப் பணம் படைத்தவர்களால் புரிந்து கொள்ளப்படுவதில்லை. ஆனால் ஓர் இறையடியான் நோன்பு துறக்கும் நேரத்தில் அந்தக் காய்ந்த ரொட்டித் துண்டின்

பெறுமதியை உணர்ந்துகொள்வான். அது மிகப் பெரியதோர் அருட்கொடை என்பதற்கு அந்த நேரத்தில் அதன் சுவையை முழுமையாக உணர்கின்ற சுவையுணர்வும் தேவையை முழுமையாக உணர்கின்ற பசியுணர்வும் சான்று பகரும். ஆம், புனித ரமழானில் மாமன்னர்கள் முதல் பரம ஏழைகள் வரை அனைவரும் அந்த அருட்கொடைகளின் பெறுமதியை உணர்ந்து கொள்வதன் மூலம் நன்றி செலுத்துவதற் குரிய ஆன்மீக ரீதியான அந்தஸ்த்தை அடைந்து கொள்கின்றனர்.

மேலும் பகல் காலங்களில் உண்பதை விட்டும் தடுக்கப்பட்டுள்ள காரணத்தினால் “இந்த அருட்கொடைகள் எனது சொத்துக்கள் அல்ல, இவற்றை அனுபவிப்பதற்கு எனக்கு எந்த வித சுதந்திரமும் கிடையாது, இவற்றின் உண்மை உரித்தாளன் வேறொருவனாக இருக்கின்றான், அவனது கட்டளைக்காக காத்திருக்கின்றேன்” என்று அனைத்தையும் அருள்களாகப் பார்ப்பதற்கும் அதன் மூலம் அருள்பாலிக்கின்ற அருளாலனை நோக்கித் திரும்புவதற்கும் கற்றுக் கொள்வான். எனவே நன்றியும் செலுத்துவான். ஆம், இந்த

அடிப்படையில் நோன்பானது பல்வேறு கோணங்களில் மனிதனுடைய அடிப்படைக் கடமையாக உள்ள நன்றியின் திறவுகோள் என்ற அந்தஸ்த்தை அடைகின்றது.

**மூன்றாவது அம்சம்**

நோன்பில் மனிதனுடைய சமூக வாழ்வோடு தொடர்பான பல்வேறு தாத்பரியங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றை நோக்குவோம்:

வாழ்வாதார விடயத்தில் மனிதர்கள் பல்வேறு தராதரங்களை உடையவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இதில் ஏற்படுகின்ற ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்காக வல்லோன் அல்லாஹ் வசதியுள்ளவர்களை ஏழைகளின் உதவிக்காக அழைக்கிறான். நோன்பில் பசித்திருக்கும் போது வசதியுள்ளவர்கள் வறியவர்களின் கவலைக்கிடமான நாளாந்த நிலமைகளையும் பசியின் கொடுமையையும் உணர்ந்துகொள்கின்றனர். ஒரு வேளை நோன்பு இல்லாதிருந்தால், வசதி படைத்தவர்களுள் அதிகமானவர்கள் மனோஇச்சையின் செல்வாக்குக்கு உற்பட்

டிருக்கின்ற காரணத்தினால், பசியும் வறுமையும் எவ்வளவு கஷ்டகரமானது என்பதையும் உண்ண வசதியற்ற ஏழைகள் எந்த அளவு ஆதரவளிக்கப்பட வேண்டிய வர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் உணர்ந்து கொள்ள வாய்ப்பற்றவர்களாக ஆகியிருப்பார்கள்.

மேலும், சக மனிதர்களுக்கு இரக்கம் காட்டும் பண்பானது தூய நன்றிக்கான ஓர் அடிப்படையாகும். எந்த ஒரு மனிதனை எடுத்துக் கொண்டாலும், தன்னை விட ஏதோ ஒரு வகையில் வறிய நிலையில் உள்ள ஒருவனைக் கண்டு கொள்ளலாம். எனவே ஒவ்வொரு மனிதனும் தன்னை விடக் கீழ் நிலையிலுள்ள மனிதன் மீது ஆதரவு செலு த்தக் கடமைப்பட்டுள்ளான். தனது நஃப்ஸைப் பசியில் போடுவது நோன்பின் மூலம் கடமையாக்கப்பட்டிருக்காவிட்டால் தனக்குக் கீழ் நிலையில் உள்ளவர்கள் மீது இரக்க உணர்வோ தனக்குக் கிடைக்கப் பெற்றுள்ள அருள்களுக்கான நன்றியுணர்வோ உளப்பூர்வமாக வெளிப்பட்டிருக்காது. எனவே நோன்பு தம் மீது கடமையான நன்றியையும் தர்மத்தையும் ஆத்ம திருப்தியோடு நிறைவே

ற்றுவதற்கான பயிற்சியை வழங்குகின்றது. இல்லாவிட்டால் எல்லோருக்கும் இதற்கான வாய்ப்புக் கிட்டியிருக்காது.

**நான்காவது அம்சம்**

புனித ரமழான் மாத நோன்பில் மனித நஃப்ஸின் பயிற்றுவிப்போடு தொடர்பான பல்வேறு தாத்பரியங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றை நோக்குவோம்:

நஃப்ஸானது எப்போதும் சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் இருக்கவே விரும்பும். ஏதோ ஆதியிலிருந்து தான் அவ்வாறு இருப்பதாகவே கருதிக் கொள்ளும். கூடவே ஆழ் மனதில் இயல்பாகவே மாயையான ஒரு அதிகாரத்தையும் சுயாதீனத் தன்மையையும் உணரும். தான் எண்ணிலடங்காத அருட்கொடைகளால் பராமரிக்கப்படுகிறேன் என்பதை சிந்திக்க விரும்பாது, குறிப்பாக சொத்து சுகங்களும் ஆட்சியதிகாரங்களும் வாய்க்கப் பெற்று அலட்சியப் போக்கும் அவற்றோடு இணைந்து கொண்டால் பிறர் நலன் பாராது வெறிபிடித்த மிருகங்களைப்

போல் இறை அருட்கொடைகள் மீது பாய்ந்து செல்லும்.

புனித ரமழானில் கோடீஸ்வரர்கள் முதல் வறியவர்கள் வரை ஒவ்வொரு நஃப்ஸூம் தனது அதிகாரத்தின் மாயையும் சுயாதீனப் போக்கின் போலித் தன்மையையும் உணர்ந் துகொள்ளும்; தான் ஒரு சேவகனாகவும் அடிமையாகவுமே இருக்கிறேன் என்பதைக் கண்டுகொள்ளும். அனுமதியில்லாவிட்டால் மிக அற்பமான, மிக இலகுவானதொரு காரியத்தைக் கூட நிறைவேற்ற முடியாது, ஏன் ஒரு மிடர் தண்ணீர் கூட அருந்த முடியாது என்பதைக் காண்கின்ற நஃப்ஸ் தனக்குள் மாயையாகக் கட்டியெழுப்பிய ருபூபியத்துடைய போலித் தன்மையை உணர்ந்துகொள்ளும். தானே தன்னுடைய ரப் என்ற திமிர் அடங்கி உபூதியத் என்ற அடிமைத்துவத்தையும் நன்றியையும் நோக் கித் திரும்பும்.

**ஐந்தாவது அம்சம்**

புனித ரமழான் மாத நோன்பில் நஃப்ஸின் வக்கிர குணங்களைப் பண்படுத்தி அதை

கட்டுக்கடங்காத போக்கிலிருந்து விடுவிப்பது தொடர்பான பல்வேறு தாத்பரியங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றை நோக்குவோம்:

மனித நஃப்ஸானது அலட்சியப் போக்குக் காரணமாக தன்னைத் தானே மறந்து விடுகின்றது. தனது இயல்பிலேயே குடி கொண்டுள்ள எல்லையற்ற இயலாமையை யும் முடிவற்ற தேவைகளையும் எண்ணற்ற குறைபாடுகளையும் கண்டு கொள்ளாது, கண்டு கொள்ள விரும்பவும் மாட்டாது. மேலும் தனது எல்லையற்ற பலவீனத்தையும் அழிவுகள், அனர்த்தங்களுக்கு முன்னால் தனது சரணாகதி நிலையையும் விரைவாக சிதைந்து அழுகிப் போகக் கூடிய வெறும் சதையாலும் எழும்பாலும் தான் ஆக்கப் பட்டிருப்பதையும் ஒரு போதும் சிந்திக்காது. ஏதோ உருக்காலான உடம்புக்கு சொந்தக் காரன் போலும், இரவா வரம் பெற்று நிரந்தரமாக உலகிலேயே வாழப் போவது போலும் ஒரு வகையான மாயையில் உலகத்தோடு தன்னைப் பிணைத்துக் கொள்ளும். பேராசையுடன் எதிலும் திருப்தியின்றி ஆன்மாவையும் இழந்து

உலகத்துக்காகவென்றே விடுபட்டு விடும். அற்ப இன்பங்களுக்காகவும் இலாபங்களுக் காகவும் எந்த ஒன்றோடும் தன்னைப் பிணைத்துக் கொள்ளும். அனைத்துக்கும் மேலால் பேரன்போடும் அருளோடும் தன்னைப் போஷித்துப் பரிபாலிக்கும் படைப்பாளனையும் மறந்து விடுகின்றது.

இவ்வாறு நஃப்ஸானது படுபாதகங்களில் உழன்று கொண்டிருக்கும் போது..

நோன்பானது அதிக அலட்சியப் போக்குடை யவர்களுக்கும் பிடிவாதக்காரர்களுக்கும் கூட அவர்களுடைய பலவீனத்தையும் இயலா மையையும் இறை ஆதரவின்பாலுள்ள தேவையையும் உணர்த்தும். மனிதன் பசி காரணமாக வயிற்றைப் பற்றி சிந்திப்பான், அதனூடாக எவ்வளவு தேவைப்பாடு உடையவனாக இருக்கின்றேன் என்பதைப் புரிந்துகொள்வான். தனது உடலின் பலவீனத்துக்கு மேல் பலவீனமான நிலை யை ஒரு கனம் சிந்தித்துப் பார்த்து இறை ஆதரவின்பால் தனக்குள்ள தேவையை உணர்ந்துகொள்வான். இவ்வாறு நஃப்ஸின் பிர்அவ்னியத்தான போக்கிலிருந்து விலகித்

தன்னுடைய எல்லையில்லாத இயலாமை, பலவீனம் என்பவற்றை அறிந்தவனாக அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுவதற்கான தேவையை உணர்ந்துகொள்வான். பின்னர் ஆழமானதொரு ஆத்ம நன்றி ஊடாக இறை கருணையில் ஆசி வைப்பான். (பொடுபோக்குத் தன்மை காரணமாக இன்னும் மரணிக்காத ஆத்மாக்களே நோன்பின் மூலம் இவ்வாறான பயன்களை அடைந்துகொள்ளும்.)

## ஆறாவது அம்சம்

ரமழானில், புனித அல் குர்ஆன் இறக்கிய ருளப்பட்டமை தொடர்பாகவும் ரமழான் மாதமே புனித அல் குர்ஆன் இறக்கியருளப் படுவதற்கான மிகச் சிறந்த காலம் என்ற வகையிலும் பல்வேறு தாத்பரியங்கள் பொதி ந்துள்ளன. அவற்றுள் ஒன்றைப் பார்ப்போம்:

சர்வ ஞானம் பொருந்திய குர்ஆன் இறக்கியருளப்பட்ட மாதம் ரமழானாகும். இதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. ஆகவே புனித குர்ஆன் இறக்கியருளப்பட்ட அந்தக் காலத்திற்காக அடியார்கள் அனை

வரும் தம்மைத் தயார் செய்துகொள்வது குர்ஆனுக்குக் கொடுக்கும் மகத்தான ஒரு கண்ணியமாகும். எனவே ரமழானுடைய காலத்தில் அடியார்கள் அனைவரும் அர்ஷிலிருந்து வரும் அந்தத் தெளிவுறை களை அழகிய முறையில் வரவேற்பதற்காக நஃப்ஸுடைய இச்சைகளிலிருந்தும் வீண் விளையாட்டுகளிலிருந்தும் ஒதுங்கி, உணவு, பானம் போன்றவற்றைத் துறந்து ஒரு வகை மலகானியத்தான நிலைக்கு உயர்கின்றனர். இதன் மூலமாக அந்த மாதத்தில் குர்ஆனை அன்றைய தினம் இறக்கியருளப்படுவது போன்று ஓதி, அதிலுள்ள அல்லாஹ்வின் வார்த்தைகளை ரஸூலே அக்ரம் அலைஹி ஸ்ஸலாது வஸ்ஸலாம் அவர்களிடமிருந்து நேரடியாக செவிமடுக்கும் உணர்வில், அல்லது ஜிப்ரீல் (அலை) அவர்களிடமிருந்து அல்லது அந்த வார்த்தைகளின் சொந்தக் காரனான நித்திய அரசன் அல்லாஹ் விடமிருந்தே நேரடியாக செவிமடுக்கும் உணர்வில் செவிமடுப்பதன் மூலம் மகத்தான அந்தஸ்துகளை அடைந்து கொள்கின்றனர். இது இந்த மாதத்தில் குர்ஆன் இறக்கியருளப் பட்டதிலுள்ள தாத்பரியத்தை ஓரளவு எடுத்துக் காட்டுகின்றது.

ஆம் புனித ரமழான் மாதத்தில் இஸ்லாமிய உலகம் முழுவதும் ஒரு வணக்கஸ்தலமாக மாறிவிடுகின்றது. மில்லியன் கணக்கான ஹாஃபிஸ்கள் அந்த வணக்கஸ்தலத்தின் எல்லா மூலைமுடுக்குகளிலும் அமர்ந்து அர்ஷிலிருந்து வரும் வழிகாட்டியான அந்தக் குர்ஆனை பூமியிலுள்ளவர்களுக்கு எத்தி வைக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு ரமழானும் شَهْرُ رَمَضَانَ الَّذِي أُنزِلَ فِيهِ الْقُرْآنُ என்ற வசனத்தின் தாத்பரியத்தைப் பிரகாச மாகப் பிரதிபலித்துக்கொண்டும் தான் குர்ஆனுடைய மாதம் என்பதை நிரூபித்துக் கொண்டுமிருக்கின்றது. அந்த விசாலமான வணக்கஸ்தலத்தில் வீற்றிருக்கும் ஜமாஅத் தின் ஏனைய அங்கத்தவர்களில் சிலர் இறை காதலுடன் அந்த வார்த்தைகளுக்கு செவிசாய்ப்பார்கள். இன்னும் சிலரோ தாமாக ஓதிக் கொள்வார்கள். இப்படிப்பட்ட ஆன்மீக மயமான ஒரு வணக்கஸ்தலத்தில் இருந்து கொண்டு நஃப்ஸின் இச்சைகளுக்கு அடிமையாகி உண்டு குடித்து அந்த ஆன்மீக சூழலிலிருந்து வெளியேறுவது தன்னளவில் வெறுக்கத்தக்க ஒரு செயலாக இருப்பது மாத்திரமன்றி அந்த ஜமாஅத்தின் ஆன்மீக ரீதியான வெறுப்பையும் சம்பாதித்துக்கொள்ள

வழிவகுக்கும். அவ்வாறே புனித ரமழானில் நோன்பாளிகளைத் தூற்றிக் குரோதம் வளர்ப்பவர்களும் முஸ்லிம் உம்மத்துடைய ஆத்ம வெறுப்பை சம்பாதித்துக்கொள்வார்கள்.

**ஏழாவது அம்சம்**

மனிதன் உலகத்துக்கு மறுமை வியாபாரத்திற்காக அனுப்பப்பட்டவன் என்ற வகையில், ரமழான் நோன்பில் மனித குலத்துக்கான வெகுமதிகளோடு தொடர்பான பல்வேறு தாத்பரியங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றைப் பார்ப்போம்:

புனித ரமழானில் நல்லமல்களுக்கான கூலி ஒன்றுக்கு ஆயிரமாகும். ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று குர்ஆனின் ஒவ்வொரு எழுத்துக்கும் பத்து நன்மைகள் பதியப்படுகின்றன. அதாவது பத்து அழகிய செயல்களாக மாறி பத்து சுவனத்துக் கனிகளைப் பெற்றுத் தருகின்றன. புனித ரமழானைப் பொருத்தவரை ஒவ்வொரு எழுத்துக்கும் பத்தல்ல ஆயிரம் நன்மைகளும் ஆயதுல் குர்ஸி போன்ற வசனங்களின்

ஒவ்வொரு எழுத்துக்கும் பல்லாயிரக் கணக்கான நன்மைகளும் குறிப்பாக ரமழானுடைய ஜூம்ஆ தினங்களில் அதைவிட அதிகமான நன்மைகளும் பதியப்படுகின்றன. லைலதுல் கத்ர் தினத்தில் அந்த நன்மைகள் முப்பதாயிரமாக உயர்கின்றன. ஆம்! ஒவ்வொரு எழுத்துக்கும் முப்பதாயிரம் நித்திய கனிகளை இறை அடியார்களுக்குப் பெற்றுத்தரும் சங்கைமிக்க குர்ஆன் புனித ரமழானில் தூபா மரத்தை ஒத்ததொரு நிலையை அடைந்து கோடிக் கணக்கான நித்திய கனிகளை இறை அடியார்களுக்கு பெற்றுக் கொடுக்கின்றது. இதோ இந்த நஷ்டமே இல்லாத, நித்திய இலாபங்களைத் தரும் புனிதமான வியாபாரத்தைத் தவற விட்டு விடாதீர்கள். மேலும் இந்த வியாபாரத்தின் பெறுமதியைப் பொருட்படுத்தாமல் புறக்கணிப்பவர்கள் எப்படிப்பட்ட கணக்கிட முடியாத ஒரு நஷ்டத்தில் இருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

ஆம் புனித ரமழான், மறுமை வியாபாரத் திற்கான மிகவும் இலாபகரமானதொரு சந்தையாகும்; நிரந்தர விளைச்சல்களை

பெற்றுத்தரக்கூடிய செழிப்பு மிக்கதொரு விளைச்சல் நிலமாகும்; அமல்கள் பல்கிப்பெருகி பல மடங்குகளாக மாறும் ஒரு ஆன்மீக வசந்த காலமாகும்; இறை பரிபாலிப்புக்கும் ஆட்சியதிகாரத்துக்கும் முன்னால் மனிதனின் அடிமைத்துவத்தை பறைசாற்றுவதற்கான மிகப் புனிதமானதொரு பண்டிகைக் காலமாகும். இப்படிப்பட்ட மகத்துவங்கள் காரணமாகத்தான் நஃப்ஸ், உண்டு, குடித்துப் பொடுபோக்குத்தனத்தில் வீழ்ந்து விடாதிருப்பதற்காகவும் மிருகத் தனமான இச்சைகளுக்கு அடிமைப்பட்டு வீண் விளையாட்டுகள், உலக இன்பங்களில் மூழ்கி விடாதிருப்பதற்காகவும் இம்மாதத்தில் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு மிருகத்தனமான இச்சைகளிலிருந்து விடுபட்டு மலகானியத் நிலையை அடைந்து மறுமை வியாபாரத்துக்காக மனிதன் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொள்கிறான். உலகாயுத தேவைகளை விட்டும் தற்காலிகமாக ஒதுங்கி ஒரு சுவனத்து ஆத்மா உடலுருப் பெற்றதைப் போல் மாறிவிடுகி றான். இவ்வாறு நோன்பினூடாக தனது

இரட்சகன்பால் தனக்குள்ள தேவையை ஒரு வகையில் பிரதிபலிக்கின்றான்.

ஆம் புனித ரமழான், தற்காலிகமான இந்த உலகில் தற்காலிகமான, குறுகிய ஒரு வாழ்வுக்குப் பகரமாக நித்தியமானதும் முடிவற்றதுமான ஒரு வாழ்க்கையை வெற்றியீட்டித்தருகின்றது. ஆம் தனி ஒரு ரமழான், என்பது வருட ஆயுளுக்குச் சமனான நித்திய கனிகளைப் பெற்றுத் தருகின்றது. லைலதுல் கத்ர் குர்ஆன் இறங்கிய காரணத்தினால் ஆயிரம் மாதங்களை விட சிறப்புப் பெற்றமை இதற்கான சான்றாகும். மாமன்னர்கள் தமது ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு வருடமும் தனது ஆட்சியதிகாரத்துக்கும் கண்ணியத் துக்கும் பெருமை சேர்க்கும் வகையில் குறித்த சில விஷேட தினங்களை விழாக்காலமாக அறிவிப்பார்கள். அன்றைய தினம் வழமையான நடைமுறைகள், சட்டதிட்டங்களுக்கு மாற்றமாகத் தனக்கு விசுவாசமான அந்த மக்களுக்கு முன்னால் ஆஜராகி மக்கள் மீதான தனது விஷேட அன்பை வெளிப்படுத்துவார்கள். அவர்களைப் பல விதமான அன்பளிப்புகள், சலுகைகள்

மூலம் மகிழ்வூட்டுவார்கள். இவ்வாறு ஒட்டு மொத்த மக்கள் மத்தியிலும் தன் மீதுள்ள நெருக்கமும் விசுவாசமும் அதிகரிக்க வேண்டும் என்று விரும்புவார்கள்.

ஆம், ஆதி அந்தமில்லாத அரசனாகவும் பதினெட்டாயிரம் உலகங்களின் சக்கரவர்த்தி யாகவும் இருக்கின்ற சர்வ வல்லோன், அந்த அனைத்து உலகங்களோடும் தொடர்பான சர்வ ஞானம் பொருந்திய குர்ஆனை புனித ரமழானில் இறக்கி அருளினான். நிச்சயமாக இப்படிப்பட்ட ரமழான் மாதமானது அதி விஷேடமானதொரு பண்டிகைக் காலமாகவும் ஆன்மீக களிப்பால் நிரம்பிய ஓர் ஒன்றுகூடலாகவும் இருக்க வேண்டும் என்பது இறை ஞானத்தின் வெளிப்பாடாகும். இப்படிப்பட்ட ரமழான் மாதத்தில் மனிதர்கள் இன்ன பிற இச்சைகளின் பின்னாலும் வீண் விளையாட்டுக்களின் பின்னாலும் சென்று விடாதிருப்பதற்காக நோன்பு கடமையாக்க ப்பட்டுள்ளது. மேலும் அப்படிப்பட்ட நோன்புகளுள் மிகச் சிறந்தது வயிற்றைப் போன்றே ஆசாபாசங்களையும் கண், காது, உள்ளம், கற்பனா சக்தி போன்ற உறுப்பு களையும் நோன்பிருக்கச் செய்வதாகும்.

அதாவது தடுக்கப்பட்டவற்றை விட்டும், வீண் விளையாட்டுகளை விட்டும் இவற்றைத் திசை திருப்பி ஒவ்வொன்றையும் அவற்றுக்கென்றே உள்ள வணக்க வழிபாடுகளை நோக்கி நகர்த்த வேண்டும். உதாரணமாக, நாவை பொய், புறம், மோசமான வார்த்தைகள் என்பவற்றிலிருந்து தடுத்து குர்ஆன் திலாவத், திக்ர், ஸலவாத், பாவமன்னிப்பு போன்றவற்றில் செலவிடுவது நாவை நோன்பு நோற்க வைப்பதாகும். கண்களை ஹராமானவற்றை பார்ப்பதிலிருந்து தடுத்து அல்லாஹ்வின் அற்புத படைப்பினங்களைப் பார்த்துப் படிப்பினை பெறுவதற்காகவும், காதுகளை மோசமானவற்றை கேட்ப திலிருந்து தடுத்து குர்ஆனையும் நல்ல விடயங்களையும் செவிமடுப்பதற்காகவும் பயன்படுத்துவது அந்த உறுப்புகளை நோன்பு நோற்க வைப்பதாகும். மேலும் வயிறு மிகப் பெரியதொரு தொழிற்சாலையாக இருப்பதால் நோன்பு நோற்று அதனை வழிக்குக் கொண்டு வருவதன் மூலமாக ஏனைய சிறு அவயவங்களையும் இலகுவாக கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வர முடியும்.

## எட்டாவது அம்சம்

புனித ரமழானில் தனி மனித வாழ்வோடு தொடர்பான பல்வேறு தாத்பரியங்கள் பொதிந்துள்ளன. அவற்றுள் ஒன்றை இவ்விடத்தில் நோக்குவோம்:

உடல், உள ரீதியான தடைகளையும் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்துவது ஆன்மீக ரீதியாகவும் மருத்துவ ரீதியாகவும் மனிதர்களுக்கான மிகப் பெரியதொரு நோய் நிவாரணியாகும். மனிதன் தனது நஃப்ஸுக்கு அடிமைப்பட்டு உண்ணல், குடித்தல் விடயத்தில் மனம் போன போக்கில் செயல்படுவது தனிப்பட்ட பௌதீக வாழ்வுக்கு மருத்துவ ரீதியாக பாதகமானது மாத்திரமன்றி கண்ணில் பட்டதையெல்லாம் ஹலால் ஹராம் பாராது உண்டு புடைப்பது எவ்வித சந்தேகமுமின்றி ஆன்மீக வாழ்வையும் நஞ்சூட்டும். அதன் பிறகு ஆத்மாவுக்கும் மனசாட்சிக்கும் செவிசாய்ப்பது அந்த நஃப்ஸுக்கு மிகவும் கடினமானதாக மாறும்; கலகம் விளைவித்து கடிவாளத்தை தன் கையில் எடுத்துக் கொள்ளும். இந்த நிலையை அடைந்த பிறகு மனிதன்

நஃப்ஸின் மீது ஏற முடியாது, நஃப்ஸ் மனிதன் மீது ஏறிக் கொள்ளும்.

இப்படிப்பட்ட நஃப்ஸ் புனித ரமழானில் ஒரு வகையில் கட்டுப்படுவதற்கும் அடிபணி வதற்கும் பழகிக்கொள்ளும்; ஒரு வகையான துறவுக்குத் தன்னைப் பழக்கிக்கொள்ளும்; சொல் பேச்சுக் கேட்பதற்கு கற்றுக்கொள்ளும். எனவே சமிபாடடைவதற்கு முன் உணவுக்கு மேல் உணவைக் கொட்டி அப்பாவியான உடல் நோயாளியாகுவது தடுக்கப்படும். மேலும் இறை கட்டளைக்கு கட்டுப்பட்டு ஹலாலானவற்றைக் கூட புறந்தள்ளி விடுவதால், ஹராத்தை விட்டும் தவிர்ந்து கொள்வதற்கான ஷரீஅத்தினதும் மனசாட்சியினதும் கட்டளைகளுக்கு செவிசாய்க்கும் திராணியை வளர்த்துக் கொள்ளும். இவ்வாறு ஆன்மீக வாழ்வு அசிங்கப்படாமல் பாதுகாக்கப்படும்.

மேலும் மனிதர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பசிக்கொடுமைக்கும் துன்ப துயரங்களுக்கு ஆளாகின்றனர். ஆகவே மனிதர்கள் பொறுமை, சகிப்புத்தன்மை என்பவற்றின் மீதும் இவற்றுக்கான மிகப்

பெரிய பயிற்றுவிப்பாக உள்ள பட்டினி, துறவு என்பவற்றின் மீதும் தேவை உடையவர் களாக இருக்கின்றனர். புனித ரமழான் நோன்பானது ஏறக்குறைய பதினைந்து மணித்தியாலங்கள், ஸஹர் இல்லாதவிடத்து இருபத்து நான்கு மணித்தியாலங்கள் வரை நீளும் ஒரு பட்டினிக் காலம் என்பதால் பொறுமைக்கும் சகிப்புத்தன்மைக்குமான மிகப் பெரியதொரு பயிற்சியாகும். இந்த வகையில் கவலைகள் துன்பதுயரங்களை இரட்டிப்பாக்கும் பொறுமையின்மை சகிப்புத்தன்மையின்மை என்பவற்றுக்கு நோன்பு ஒரு மருந்தாக உள்ளது.

மேலும் வயிறு எனும் தொழிற்சாலைக்காக வேலை செய்யும் பல பணியாளர்களும், அதனோடு தொடர்புபட்டு அதில் தங்கி வாழ்கின்ற பல்வேறு உறுப்புகளும் மனித உடலில் காணப்படுகின்றன. குறித்த ஒரு மாதம் பகல் பொழுதில் வயிற்றுக்கு ஓய்வு கொடுக்கப்படவில்லை எனில் அந்தத் தொழிற் சாலைப் பணியாளர்களுக்கும் அதனோடு தொடர்பான அங்க அவயவங்களுக்கும் ஓய்வு க்கான வாய்ப்பே கிடைக்காமல் போய்விடும். நஃப்ஸ் அவற்றைத் தொடர்ந்தேர்ச்சையாகத்

தனக்காகவே வேலை வாங்கி அடிபணியச் செய்து, அவற்றின் தனிப்பட்ட வணக்க வழிபாடுகளை மறக்கடிக்கச் செய்துவிடும். கூடவே ஆன்மீக சாதனங்களான அறிவு, ஆத்மா, சிந்தனை, மனச்சாட்சி போன்றவற்றைக் கூட அந்த தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் இரைச்சல்கள் மற்றும் புகை மூட்டம் மூலம் அசௌகரியப்படுத்தும். இறுதியில் இந்தக் குழப்ப நிலையைப் பயன்படுத்தி ஒட்டுமொத்த உறுப்புகளையும் தனக்காக மாத்திரம் தொழிற்படச் செய்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கும். இவ்வாறு அனைத்து உறுப்புகளும் தமக்கென்றுள்ள மிகப் பெரிய கடமைகளை மறந்து நஃப்ஸ்ˢடைய சேவகர்களாக மாறிவிடும். இந்தக் காரணத்தினால்தான் ஆரம்ப காலம் தொட்டே நல்லடியார்களும் அவ்லியாக்களும் ஆன்மீக உயர்வை அடைவதற்காக எளிமையையும் குறைவாக உண்பதையும் வழக்கமாக்கிக் கொண்டார்கள்.

ஆம், ரமழான் நோன்பினூடாக அந்தத் தொழிற்சாலைப் பணியாளர்கள் தாம் அந்தத் தொழிற்சாலைக்குச் சேவகம் செய்வதற்காக மாத்திரம் படைக்கப்படவில்லை என்பதைப்

புரிந்துகொள்கின்றன. மேலும் அந்தத் தொழிற்சாலையைச் சார்ந்திருக்கும் பிற உறுப்புகளும் அதனூடாக அனுபவிக்கும் அற்ப இன்பங்களுக்குப் பதிலாக புனித ரமழானில் உன்னதமான ஆத்மீக இன்பங்களில் களிப்படைகின்றன. தமது நேரங்களை அதற்காக செலவிடுகின்றன. இதனால் தான் போலும் ரமழானில் இறை அடியார்கள் தத்தமது படித்தரத்துக்கேற்ப விதவிதமான ஆத்மீக உணர்வுகளையும் இன்பங்களையும் அடைந்து கொள்கின்றனர். உள்ளம், ஆத்மா, அறிவு, சிந்தனா சக்தி, கற்பனா சக்தி போன்ற போஷிக்கப்பட வேண்டிய ஆத்மீக சாதனங்கள் அனைத்தும் பரக்கத் பொருந்திய இந்த மாதத்தில் அதிகபட்ச உயர்ச்சியையும் இன்பத்தையும் அடைந்து கொள்கின்றன. வயிறு அழுது புலம்பினாலும் கூட இந்த சாதனங்கள் மகிழ்ச்சி மேலீட்டால் தமக்கிடையே ஓரக் கண்ணால் புன்னகைத்துக் கொள்கின்றன.

**ஒன்பதாவது அம்சம்**

புனித ரமழான் நோன்பில், நஃப்ஸ் தனக்குள் மாயையாக உருவாக்கிக்கொண்ட

அதிகாரப் போக்கை உடைத்து, அதன் பலவீனத்தை உணர்த்தி, அடிமைத்துவத்தை நினைவூட்டுவது தொடர்பான பல்வேறு தாத்பரியங்கள் பொதிந்துள்ளன. அவற்றுள் ஒன்றை நோக்குவோம்:

நஃப்ஸ் தனது இரட்சகனை, தன்னை இரட்சித்துப் பரிபாலிப்பவனாக அறிந்து கொள்ள விரும்புவதில்லை. பிர்அவ்னைப் போன்று தன்னைத் தானே இரட்சகனாகக் கண்டுகொள்கிறது. எப்படிப்பட்ட கஷ்ட நஷ்டங்கள், துன்ப துயரங்களைக் கொடுத் தாலும் அந்த அகம்பாவம் அதனை விட்டகழாது. ஆனால் பட்டினி மூலமாக அந்த நரம்பை வெட்டியெறிய முடியும். ஆம் புனித ரமழான் மாத நோன்பானது நஃப்ஸுடைய பிர்அவ்னியத்தான அந்த நரம்பை நேரடியாகத் தாக்கி அழித்து விடுகின்றது. அதன் இயலாமையையும் பலவீனத்தையும் தேவைகளையும் எடுத்துக்காட்டி அடிமைத் துவத்தை நினைவூட்டுகின்றது.

ஒரு ஹதீஸில் வருவதாவது: சர்வ வல்லோன் அல்லாஹ் நஃப்ஸைப் படைத்த பின்னர் நஃப்ஸிடம் “நான் யார்? நீ யார்?”

என்று வினவினான். நஃப்ஸ் “நான் நானாவேன், நீ நீயாவாய்” என்று பதிலளித்தது. பின்னர் நஃப்ஸை நரகத்தில் ஆழ்த்தித் துன்புறுத்திவிட்டு மீண்டும் அதே கேள்வி கேட்கப்பட்டது: “நான் யார்?, நீ யார்?”. நஃப்ஸிடமிருந்து மீண்டும் அதே பதிலே வந்தது: “நான் நானாவேன், நீ நீயாவாய்” எல்லா வகையான வேதனைகளுக்குப் பின்னரும் நஃப்ஸ் தனது அகம்பாவத்தை விட்டுக்கொடுக்கவில்லை. இறுதியில் பட்டினியால் வேதனைப்படுத்தப்பட்ட பின்னர் அதே கேள்வி மீண்டும் கேட்கப்பட்டது “நான் யார்? நீ யார்?”. அப்போது நஃப்ஸ் “நீ ரஹ்மானாகவும் ரஹீமாகவும் உள்ள எனது ரப்பாவாய். நானோ உனது வக்கற்ற ஓர் அடிமையாவேன்” என்று பதிலளித்தது.

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَاةً
تَكُونُ لَكَ رِضَاءً وَ لِحَقِّهِ اَدَاءً بِعَدَدِ ثَوَابِ
قِرَاَئَةِ حُرُوفِ الْقُرْاٰنِ فِى شَهْرِ رَمَضَانَ وَ
عَلٰى اٰلِهِ وَ صَحْبِهِ وَ سَلِّمْ

سُبْحَانَ رَبِّكَ رَبِّ الْعِزَّةِ عَمَّا يَصِفُونَ * وَسَلاَمٌ عَلَى الْمُرْسَلِينَ * وَ الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ اَمِين

இது போன்ற மொபைல் நூல்களைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் கீழுள்ள WhatsApp இலக்கத்தைத் தொடர்புகொள்ளவும்.

+94772048153